ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

18.06.2026

1. தயாபரனே ஞானத் தலைவனே
தணிகாசலனே முருகப்பெருமானே
தயவோடு என் மக்கட்கருள்வாயென
தவராஜன் அரங்கனும் உமை போற்றி

2. போற்றியே பராபவ மிதுன திங்கள்
புகலுவேன் முதல் குருவார அருளாசி
ஆற்றல்பெருக மக்களுக்கு உரைப்பேன்
அரங்கன் யான் சரவண ஜோதி கலந்து

3. கலந்து அற்புதம் நடத்திட
கருணை வேண்டி கஷ்டம் நீங்கிட
பலம் தரும் பிரணவ குடில் நோக்கிவர
பாவ சாப கரும வினைகள் அகன்று

4. அகன்று பாதுகாப்பு அடைவர்
அருளமுதாம் பிரணவக் குடிலின்
மிகையான அன்னமதை உண்டு
மேலான தருமத்தில் பொருளுதவி

5. உதவி செய்து வருதல் காண
ஊழகன்று தான் தனக்கெனும்
பூதலத்தில் ஆசைகள் அகன்று
புண்ணிய கதியே சிறந்ததெனும்

6. எனும் சிறப்பறிவு கூடியே
இயல்பான வாழ்க்கை முறையுடன்
தான தருமநெறிமுறை தொடர்ந்து
தவ வாழ்வும் கண்டு சிறப்பர்

7. சிறப்பான சன்மார்க்க வழியில்
சிந்தனை கூடி மனம் ஒடுங்கி
அறத்தோடு வாழும் பண்பும்
ஆறுமுகன் அரங்கனென் ஆசியும் பெறுவர்

8. ஆசிபெற இந்தக் கலியில்
ஆபத்து கண்டமிடரில்லா
பசிபிணி நரை திரை மூப்பிலா
பரிபக்குவம் கூடிய ஞானவானாக

9. ஆகவே ஞானிகள் வந்தருள
அனைவரும் ஞானிகள் ஆவர்
யுகமாற்றம் நடத்த வல்லதொரு
உயர் மக்கள் படைகள் பெருகி

10. பெருகியே கலியினில் மாற்றம்
பிரபஞ்சம் வியக்க வருமுலகில்
முருகப் பெருமான் தலைமையை
முழுமைபட ஏற்ற காலமாக

11. ஆகவே அற்புதம் நிகழும்
அரங்கனென் அவதார மகிமையாக
யுகமாற்றம் இனிதே நடந்தேறும்
உரைத்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி